ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1789/22 - 2012 දෙසැම්බර් මස 19 වැනි බදාදා - 2012.12.19
*1789/22 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்*

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழான அறிவித்தல்*

*2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, திருத்தப்பட்டவாறான செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு மற்றும் சுற்றுலா விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரோஹன ராஜபக்ஷ ஆகிய நான், இந்த அறிவிப்பின் மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறேன்:-*

*(1) மேல் மாகாணத்தில் கொழும்பு 3, காலி வீதியில் இலக்கம் 116 என்ற இடத்தில் 90 சேவைகள் வழங்களுடன் கூடிய மாடி வீடுகளைக் கொண்ட 475 அறைகளுடனான நகர ஹோாட்டல் ஒன்றை மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காகச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக நிர்மாணித்துச் செயற்படுத்துவதை இனங்கண்ட அறிவித்தல் 2012, ஓகத்து 15 ஆந் திகதிய 1771/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது ;*

*(2) மேல் மகாணத்தில் கொழும்பு 03 காலி வீதியில் இலக்கம் 116 என்ற இடத்தில் 90 சேவைகள் வழங்களுடன் கூடிய மாடி வீடுகளைக் கொண்ட 475 அறைகளுடனான நகர ஹோாட்டல் ஒன்றை நிர்மாணித்துச் செயற்படுத்துவதற்கான கருத்திட்டத்தை 3 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்று என்பதாகப் பிரகடனப்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது ;*

*(3) மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் "மேல் மாகாணத்தில் கொழும்பு 03, காலி வீதியில் இலக்கம் 116 என்ற இடத்தில் 90 சேவைகள் வழங்களுடன் கூடிய மாடி வீடுகளைக் கொண்ட 475 அறைகளுடனான நகர ஹோாட்டல் ஒன்றை நிர்மாணித்துச் செயற்படுத்துவதற்கான கருத்திட்டம்" என அழைக்கப்பட்டு இனங்காணப்படுவதோடு வரையறுக்கப்பட்ட சினோ லங்கா ஹோாட்டல்ஸ் மற்றும் ஆரோக்கிய நிரூற்று (தனியார்) நிறுவனம் இக்கருத்திட்டத்துக்கான கம்பனியாகும் ;*

*(4) 2012, யூலை 19 ஆந் திகதி இலங்கை முதலீட்டுச் சபையுடன் கருத்திட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து இருபத்து நான்கு (24) மாதங்களுக்குள் மேல் மாகாணத்தில் கொழும்பு 03, காலி வீதியில் இலக்கம் 116 என்ற இடத்தில் 90 சேவைகள் வழங்களுடன் கூடிய மாடி வீடுகளைக் கொண்ட 475 அறைகளுடனான நகர ஹோாட்டல் ஒன்றை நிர்மாணித்துச் செயற்படுத்துவதற்கான கருத்திட்டம் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும் ; அத்துடன்*

*(5) இக்கட்டளையின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்களின் விலக்களிப்புக்கள் இங்கு குறிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டவாறாக கருத்திட்ட கம்பனிக்கு ஏற்புடைத்தாகும்.*

**அட்டவணை**

(அ) **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டிறைவரிச் சட்டம்**

(i) கருத்திட்டம் மூலமாக ஈட்டும் இலாபம் மீது கருத்திட்டக் கம்பனிக்கு வருமான வரி விதிப்பு தொடர்பில் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பத்து (10) வருடங்களுக்கு (**“வரி விலக்களிப்புக் காலம்”**) பிரயோகமாகாது. இலாபங்களில் இருந்து பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு இலாபங்களுக்கு சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியிலும் அதன் பின்னர் ஒரு (01) வருடத்துக்கும் வருமான வரியில் இருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

(ii) சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலமானது கருத்திட்டக் கம்பனி வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்து மூன்று (3) வருடங்களின் பின்னால், எது முந்தி வருகிறதோ, அந்த ஆண்டு தொடக்கம் கணிக்கப்படும் .

(iii) மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் பின்னர் கருத்திட்ட கம்பனியின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வரி விதிப்பு வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் இறுதித் திகதியை உடன் அடுத்து வரும் மேலும் ஒரு பதினைந்து (15) வருடக் காலப்பகுதியொன்றுக்கு ஹோட்டல்துறை மீது அப்போது ஹோட்டல் துறைக்கு அமுலில் இருக்கும் வரி வீதத்தின் அரைவாசியான (1/2) அல்லது மிகக்குறைந்தது ஆறு சத வீதத்துக்குச் (6 %) சமமான வீதத்தில் ஒரு பகுதி விலக்களிப்பு வழங்கப்படும். (**“வரிச் சலுகைக் காலப்பகுதி”**).

(iv) மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதி மற்றும் வரிச்சலுகைக் காலப்பகுதியின் பின்னர் கருத்திட்ட கம்பனியின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வரி விதிப்பு அக்காலத்தில் அமுலில் இருக்கும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செலுத்தப்படல் வேண்டும்.

(v) கம்பனியின் ஆகக்கூடிய வெளிநாட்டு ஊழியர்கள் இருபது பேர்களுக்கு (20) நீங்கள் உழைத்துச் செலுத்தும் (PAYE) வரியிலிருந்து விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். இந்த சலுகை வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் எனும் ஒரு காலப்பகுதிக்கு பிரயோகமாகும். கருத்திட்டக் கம்பனியானது நன்முயற்சிகள் அடிப்படையில் படிப்படியாக வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கையை உள்நாட்டு ஊழியர்களினால் பதிலீடு செய்யுமாறு வேண்டப்படும்.

(vi) பின்வரும் விடயங்கள் தொடர்பில் **தடுத்து வைக்கும் வரி** செலுத்துவதில் இருந்து கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும் :-

(அ) மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு கடன் மீதான வட்டி ;

(ஆ) உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணம் ;

(இ) முகாமைத்துவக் கட்டணங்கள், பங்குவீத உரிமைத் தொகைக் கொடுப்பனவுகள் மற்றும் சந்தைப்படுத்தல் கட்டணங்கள் மீது ஆயின் அமெரிக்க ஹயற் ஹோட்டல் கோப்பரேஷனின் பின்வரும் துணை நிறுவனம் ஒன்றுக்கு அக்கொடுப்பனவுகள் செய்யப்படல் வேண்டும் –

* ஹயற் இன்டர்நெஷனல் சௌத் வெஸ்ட் ஏசியா லிமிட்டெட் ;
* ஹயற் இன்டர்நெஷனல் கோப்பரேஷன் ;
* ஹயற் செயின் சர்வீசஸ் லிமிட்டெட் ;
* இன்டர்நெஷனல் றிசர்வேஷன் லிமிட்டெட் ;
* எச். ஜீ. பீ. ட்றவல்ஸ் லிமிட்டெட்.

ஆயின், அடிப்படை முகாமைத்துவ கட்டணங்கள்/பங்குவீத உரிமைத் தொகைக் கொடுப்பனவுகள் என்றவாறான கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு வருமானத்தின் மூன்று வீதத்தையும் (3%) சந்தைப்படுத்தல் கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு வருமானத்தின் ஒன்று தசம் ஐந்து வீதத்தையும் (1.5%) மற்றும் ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு இலாபத்தின் பத்து சதவீதத்தையும் (10%) விஞ்சுதலாகாது.

(ஆ) ***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்***

*கலப்புப் பிரயோகக் கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மற்றும் சேவைகள் மீது* ***சேர்பெறுமதி வரி*** *செலுத்தலிலிருந்து முழு விலக்களிப்பு கம்பனி அல்லது கருத்திட்டத்துக்கான நேரடி வழங்குகைகள் மட்டுமன்றி கருத்திட்டக் கம்பனியால் அங்கீகரிக்கப்பட்டவாறாக கருத்திட்டத்துக்கு/ கம்பனிக்கு விநியோகிப்பதற்காக உப ஒப்பந்தக்காரர் ஒருவரால் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு செய்யப்படும் வழங்குகைகளுக்கும் இந்த சேர்பெறுமதி வரி விலக்களிப்பு பிரயோகமாகும்.*

*வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பித்ததன் பேரில் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறாக விநியோக பெறுமதிக்கான சேர்பெறுமதி வரி கருத்திட்ட கம்பனியால் செலுத்தப்படல் வேண்டும்.*

(இ) ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்***

*கருத்திட்ட நிர்மாண/கட்டுமான காலகட்டத்தின் போது கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் எல்லா பொருட்கள் (அவை நேரடியாக கருத்திட்ட கம்பனியால் இறக்குமதி செய்யப்பட்டவை அல்லது ஒப்பந்தக்காரர்களினூடாக பெறப்பட்டவை) மீதான* ***துறைமுக மற்றும் விமான நிலைய விதிப்பனவிலிருந்து,*** *திருத்தப்பட்டவாறான 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டவாறாகவும் அனுமதிக்கப்பட்டவாறாகவும் கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும்.*

(ஈ) ***சுங்கக் கட்டணச் சட்டம் (235 ஆம் அத்தியாயமான)***

*கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக கருத்திட்டத்துக்கு தேவைப்படும் கருத்திட்டம் தொடர்பான எல்லா பொருட்களின் இறக்குமதி மீதும், அவை நேரடியாக கருத்திட்ட கம்பனியால் இறக்குமதி செய்யப்படினும் கருத்திட்டத்தை அமுலாக்கும் கம்பனியின் பெயரில் ஒப்பந்தக்காரர்களால் இறக்குமதி செய்யப்படினும், சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும்.*

*பசில் ரோஹண ராஜபக்ஷ, பா. உ.,*
*பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2012, திசெம்பர் 17.*

*1- 88*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*